**9.** புள்ளி $(-2, 0)$ இல் மையத்தைக் கொண்டதும் புள்ளி $(-1, \sqrt{3})$ இனூடாகச் செல்வதுமான வட்டம் $S$ இன் சமன்பாட்டைக் காண்க.

புள்ளி $A \equiv (1,-1)$ இலிருந்து வட்டம் $S$ இற்கு வரையப்படும் தொடலிகளின் தொடுகை நாணின் சமன்பாட்டை எழுதுக.

**இதிலிருந்து**, $A$ இலிருந்து $S$ இற்கு வரையப்படும் தொடலிகளின் தொடுகைப் புள்ளிகளின் $x-$ ஆள்கூறுகள் சமன்பாடு $5x^2 + 8x + 2 = 0$ ஐத் திருப்தியாக்குகின்றன எனக் காட்டுக.

........................................................................................................................................

**10.** $n \in \mathbb{Z}$ இற்கு $\theta \neq (2n + 1)\frac{\pi}{2}$ எனக் கொள்வோம்.

சர்வசமன்பாடு $\cos^2 \theta + \sin^2 \theta = 1$ ஐப் பயன்படுத்தி, $\sec^2 \theta = 1 + \tan^2 \theta$ எனக் காட்டுக.

$\sec \theta + \tan \theta = \frac{4}{3}$ எனத் தரப்பட்டுள்ளது. $\sec \theta - \tan \theta = \frac{3}{4}$ என உய்த்தறிக.

**இதிலிருந்து**, $\cos \theta = \frac{24}{25}$ எனக் காட்டுக.

........................................................................................................................................


* *

[பக். 7 ஐப் பார்க்க

Education கல்வி අධ්‍යාපන
kalvi.lk


## பகுதி A

**1.** ஒவ்வொன்றினதும் திணிவு $m$ ஆகவுள்ள $A, B$ என்னும் இரு துணிக்கைகள் ஓர் ஒப்பமான கிடை நிலத்தின் மீது ஒரே நேர்கோட்டில் ஆனால் எதிர்த் திசைகளில் இயங்கிக்கொண்டு நேரடியாக மோதுகின்றன. மோதுகைக்குச் சற்று முன்னர் $A, B$ ஆகியவற்றின் வேகங்கள் முறையே $u$, $\lambda u$ ஆகும். $A$ இற்கும் $B$ இற்குமிடையே உள்ள மீளமைவுக் குணகம் $\frac{1}{2}$ ஆகும்.




மோதுகைக்குச் சற்றுப் பின்னர் $A$ இன் வேகத்தைக் கண்டு, $\lambda > \frac{1}{3}$ எனின், $A$ இன் இயக்கத் திசை புறமாற்றப்படுமெனக் காட்டுக.

**2.** ஒரு துணிக்கை ஒரு கிடை நிலத்தின் மீது உள்ள ஒரு புள்ளி $O$ இலிருந்து கிடையுடன் கோணம் $\alpha\left(0 < \alpha < \frac{\pi}{2}\right)$ இல் தொடக்க வேகம் $u = \sqrt{2ga}$ உடன் எறியப்படுகின்றது. துணிக்கை $O$ இலிருந்து ஒரு கிடைத் தூரம் $a$ இல் இருக்கும் உயரம் $\frac{3a}{4}$ ஐக் கொண்ட ஒரு நிலைக்குத்துச் சுவருக்கு மட்டுமட்டாக மேலாகச் செல்கின்றது.





$\sec^2\alpha - 4\tan\alpha + 3 = 0$ எனக் காட்டுக.

**இதிலிருந்து,** $\alpha = \tan^{-1}(2)$ எனக் காட்டுக.

[பக். 3 ஐப் பார்க்க

kalvi.lk

**3.** ஒவ்வொன்றும் திணிவு $m$ ஐ உடைய $A$, $B$ என்னும் இரு துணிக்கைகள், ஓர் ஒப்பமான நிலைத்த கப்பிக்கு மேலாகச் செல்லும் ஓர் இலேசான நீட்டமுடியாத இழையின் இரு நுனிகளில் இணைக்கப்பட்டு, உருவில் காட்டப்பட்டுள்ளவாறு துணிக்கை $A$ ஒரு கிடை நிலத்திலிருந்து உயரம் $a$ இலும் துணிக்கை $B$ நிலத்தைத் தொட்டுக் கொண்டும் இருக்கும்போது நாப்பத்தில் உள்ளன. இப்போது துணிக்கை $A$ இற்கு நிலைக்குத்தாகக் கீழ்நோக்கி ஒரு கணத்தாக்கு $mu$ வழங்கப்படுகின்றது. கணத்தாக்கிற்குச் சற்றுப் பின்னர் துணிக்கை $A$ இன் வேகத்தைக் காண்க.
$A$ நிலத்தை அடைவதற்கு எடுக்கும் நேரத்தை எழுதுக.




.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

Education கல்வி அධ්‍යාපන

**4.** திணிவு 1500 kg ஐ உடைய ஒரு கார் பருமன் 500 N ஐ உடைய ஒரு மாறாத் தடைக்கெதிரே ஒரு நேர்க் கிடை வீதியில் செல்கின்றது. காரின் எஞ்சின் 50 kW வலுவில் தொழிற்பட்டு கார் $25 \text{ m s}^{-1}$ கதியில் செல்லும்போது அதன் ஆர்முடுகலைக் காண்க.
இக்கணத்தில் காரின் எஞ்சின் தொழிற்படாமல் நிற்பாட்டப்படுகின்றது. எஞ்சின் தொழிற்படாமல் நிற்பாட்டப்படும் கணத்திலிருந்து 50 செக்கன்களிற்குப் பின்னர் காரின் கதியைக் காண்க.

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................


.................................................................................................................................



kalvi.lk

**7.** நீளம் $2a$ ஐயும் நிறை $W$ ஐயும் உடைய ஒரு சீரான கோல் $ACB$ ஆனது உருவில் காட்டப்பட்டுள்ளவாறு முனை $A$ ஓர் ஒப்பமான நிலைக்குத்துச் சுவருக்கெதிரே இருக்க $C$ இல் வைக்கப்பட்டுள்ள ஓர் ஒப்பமான முளையினால் நாப்பத்தில் வைக்கப்பட்டுள்ளது. $A$ இல் சுவரின் மூலம் ஏற்படுத்தப்படும் மறுதாக்கம் $\frac{W}{\sqrt{3}}$ எனத் தரப்பட்டுள்ளது. கோல் கிடையுடன் ஆக்கும் கோணம் $\alpha$ ஆனது $\frac{\pi}{6}$ எனக் காட்டுக.


$AC = \frac{3}{4}a$ எனவும் காட்டுக.




**8.** நிறை $W$ ஐ உடைய ஒரு சிறிய பவளம் கிடையுடன் கோணம் $\frac{\pi}{4}$ இல் சாய்ந்துள்ள ஒரு நிலைத்த கரடான நேர்க் கம்பியில் கோக்கப்பட்டுள்ளது. உருவில் காட்டப்பட்டுள்ளவாறு பருமன் $P$ ஐ உடைய ஒரு கிடை விசையினால் பவளம் நாப்பத்தில் வைக்கப்பட்டுள்ளது. பவளத்திற்கும் கம்பிக்குமிடையே உள்ள உராய்வுக் குணகம் $\frac{1}{2}$ ஆகும்.

பவளத்தின் மீது உள்ள உராய்வு விசை $F$ ஐயும் செவ்வன் மறுதாக்கம் $R$ ஐயும் துணிவதற்குப் போதுமான சமன்பாடுகளை $P$, $W$ ஆகியவற்றில் பெறுக.

$\frac{F}{R} = \frac{W-P}{W+P}$ எனத் **தரப்பட்டுள்ளது.** $\frac{W}{3} \le P \le 3W$ எனக் காட்டுக.






kalvi.lk

